# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

**அறிவிக்கை எண்: 14/2012** **நாள்: 27 .04.2012**

2007-08 முதல் 2012-13 ஆம் ஆண்டுகளுக்கான தொகுதி - IV பணியில் அடங்கிய பின்வரும் பதவிகளுக்கான காலிப்பணியிடங்களில் நேரடி நியமனம் செய்வதற்கான எழுத்துத் தேர்விற்கு 28.05.2012 அன்று வரை இணைய வழி மூலம் மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ.எண் | பதவியின் பெயர் மற்றும் பதவிக் குறியீட்டு எண் | பணி மற்றும் பணிக் குறியீட்டு எண் | காலிப் பணி இடங்களின் எண்ணிக்கை | சம்பள ஏற்ற முறை |
|---|---|---|---|---|
| 1 | இளநிலை உதவியாளர் (***பிணையமற்றது)*** (பதவிக் குறியீட்டு எண் : 2600) | தமிழ்நாடு அமைச்சுப் பணி/ தமிழ்நாடு நீதி அமைச்சுப் பணி (குறியீட்டு எண் : 006) | 4402 + (463)* | ரூ.5,200 - 20,200/- + 2,400/- தர ஊதியம் |
| 2 | இளநிலை உதவியாளர் (***பிணையம்)*** (பதவிக் குறியீட்டு எண் : 2400) | | 292 | |
| 3 | வரித் தண்டலர் - நிலை-I (பதவிக் குறியீட்டு எண் : 2500) | | 31 | |
| 4 | தட்டச்சர் (பதவிக் குறியீட்டு எண் : 2200) | தமிழ்நாடு அமைச்சுப் பணி/ தமிழ்நாடு நீதி அமைச்சுப் பணி/தமிழ்நாடு தலைமைச் செயலக பணி (குறியீட்டு எண் : 006) | 3321 + (353)* | |
| 5 | சுருக்கெழுத்துத் தட்டச்சர்-நிலை-III (பதவிக் குறியீட்டு எண் : 2300) | தமிழ்நாடு அமைச்சுப் பணி/ தமிழ்நாடு நீதி அமைச்சுப் பணி (குறியீட்டு எண் : 006) | 888 + (240)* | ரூ.5,200 - 20,200/- + 2,800/- தர ஊதியம் |
| 6 | நில அளவர் (பதவிக் குறியீட்டு எண் : 2800) | தமிழ்நாடு நில அளவை மற்றும் நில பதிவேடுகள் சார் நிலைப்பணி (குறியீட்டு எண் : 006) | 326 | ரூ.5,200 - 20,200/- + 2,400/- தர ஊதியம் |
| 7 | வரைவாளர் (பதவிக் குறியீட்டு எண் : 2900) | | 402 | |
| **மொத்த காலிப் பணியிடங்கள்** | | | **10718** | |

***குறிப்பு***

1.*பின்னடைவு காலிப் பணியிடங்களின் விவரங்கள்- இவ்வறிவிக்கையின் பிற்சேர்க்கை– I ல் காணவும்.

2. ***பணியாளர் குழுவின் (Staff Committee) ஒப்புதலுக்குட்பட்டு பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை, போக்குவரத்துத் துறை, கருவூலம் மற்றும் கணக்குத் துறை, பொதுச் சுகாதாரத் துறை ஊரக வளர்ச்சித் துறை - விழுப்புரம் அலகு, வேளாண்மை, மருத்துவம் மற்றும் ஊரக சுகாதாரம், பதிவுத் துறை மற்றும் காவல் துறைகளில் உள்ள காலிப் பணியிடங்கள் இவ்வறிவிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. இப்பணியிடங்களுக்கான தெரிவு பணியாளர் குழுவின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே மேற்கொள்ளப்படும்.***

***3. 2012-2013 ஆம் ஆண்டுகளுக்கான காலிப்பணியிடங்களைப் பொறுத்த வரை துறைகளுக்கான பணி ஒதுக்கீடு படிப்படியாக மேற்கொள்ளப்படும்.***

**2. முக்கிய தேதிகள்**

| | | | |
|---|---|---|---|
| அ | அறிவிக்கை நாள் | 27.04.2012 | |
| ஆ | விண்ணப்பங்கள் சமர்பிப்பதற்கான கடைசி நாள் | 28.05.2012 | |
| இ | வங்கி அல்லது அஞ்சலகங்கள் மூலம் கட்டணம் செலுத்துவதற்கான கடைசி நாள் | 30.05.,2012 | |
| ஈ | தேர்வு நடைபெறும் நாள் | 07.07.2012 | முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை |

**3. தகுதிகள்**

(அ) வயது (1.07.2012 அன்று)

| வ.எண் | விண்ணப்பதாரர்களின் வகைகள் | குறைந்த பட்ச வயது | அதிகபட்ச வயது |
|---|---|---|---|
| 1 | ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பழங்குடி வகுப்பினர் மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | 18 வயது | 35 வயதுக்குள் |
| 2 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | | 32 வயதுக்குள் |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) | | |
| 3 | “ஏனையோர்” (அதாவது ஆ.தி.,ஆதி(அ)., ப.வ., மி.பி.வ/சீ.ம., பி.வ., மற்றும் பி.வ(மு) ஆகிய வகுப்பினைச் சாராதவர்கள்) | | 30 வயதுக்குள் |
| 4 | நில அளவர் மற்றும் வரைவாளர் பதவிகளைப் பொறுத்த அளவில் தமிழ்நாட்டில் உள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் நில அளவர் பயிற்சி பெற்றவர்கள் | | 35 வயதுக்குள் |

I. ஆ.தி.,ஆதி(அ).,ப.வ., மி.பி.வ./சீ.ம., பி.வ., பி.வ.மு. ஆகிய வகைகளைச் சார்ந்தோர் மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியோர் குறைந்தபட்ச பொதுக்கல்வித்தகுதியைக் காட்டிலும் மேற்பட்ட கல்வித்தகுதியைப் பெற்றிருப்பின் அதாவது புகுமுக வகுப்பு / மேல்நிலைப்பள்ளி/பட்டயப்படிப்பு/பட்டப்படிப்பு ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு உச்ச வயது வரம்பு இல்லை.

II. மாநில/மத்திய அரசில் முறையாக (Regular) ஐந்தாண்டுகள் பணிபுரிந்த ஏனையோர் *(ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அ), பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்)ஆகிய சாதிப் பிரிவுகளைச் சாராத மற்ற விண்ணப்பதாரர்கள்)* இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

III. டான்சி நிறுவனத்தில் பணிபுரிந்து ஆட்குறைப்புக்குள்ளான தொழில்நுட்பத் தகுதியுள்ள மற்றும் தொழில்நுட்பத் தகுதியில்லாத பணியாளர்கள் / அரசு / கழகங்கள் மற்றும் அரசின் ஆளுகைக்குட்பட்ட நிறுவனங்களில் இதுவரை பணியிலமர்த்தப்படாமலிருப்பவர்கள் இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பு தவிர எல்லா தகுதிகளும் இருக்கும் பட்சத்தில் இவ்வறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவார்கள். தெரிவிற்கு வருபவர்கள் பொருட்டு விதிமுறைகளில் உள்ள வயது வரம்பு அரசால் தளர்த்தப்படும்.

3. (ஆ) (i) <u>கல்வித் தகுதி (அனைத்து பதவிகளுக்குமான பொதுவான கல்வித் தகுதி)</u>

<u>(27.04.2012 அன்றுள்ளபடி)</u>

கீழ்க்கண்ட அல்லது அதற்கு சமமான கல்வித் தகுதியினை விண்ணப்பதாரர்கள் பெற்றிருக்கவேண்டும்.

குறைந்தபட்ச பொதுக்கல்வித் தகுதி அதாவது பள்ளியிறுதி வகுப்பு (பத்தாம் வகுப்பு) அல்லது அதற்கு சமமான கல்வித்தகுதியில் தேர்ச்சி பெற்று மேல்நிலைப்பள்ளிக் கல்வி அல்லது கல்லூரிக் கல்வி படிப்பில் சேர்வதற்கான தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.

<u>குறிப்பு</u>

பள்ளியிறுதி வகுப்பு (பத்தாம் வகுப்பு) அல்லது அதற்கு சமமான கல்வித்தகுதியில் தேர்ச்சி பெறாதவர்கள் அதற்கு மேற்பட்ட கல்வித்தகுதியினை பெற்றிருந்தாலும் விண்ணப்பிக்க தகுதியற்றவர்களாவர்.

3. (ஆ) (ii) <u>தொழில்நுட்பக் கல்வித் தகுதி</u>

(அ) தட்டச்சர் பதவிக்கு

அரசு தொழில்நுட்ப தட்டச்சுத் தேர்வில் கீழ்க்கண்டவாறு தேர்ச்சி

(i)தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் முதுநிலை

அல்லது

(ii) தமிழில் முதுநிலை மற்றும் ஆங்கிலத்தில் இளநிலை

அல்லது

(iii) ஆங்கிலத்தில் முதுநிலை மற்றும் தமிழில் இளநிலை.

(ஆ) <u>சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை – III பதவிக்கு</u>

அரசுத் தொழில்நுட்பத் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துத் தேர்வில் கீழ்க்கண்டவாறு தேர்ச்சி

(i) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் முதுநிலை

அல்லது

(ii) தமிழில் முதுநிலை மற்றும் ஆங்கிலத்தில் இளநிலை

அல்லது

(iii) ஆங்கிலத்தில் முதுநிலை மற்றும் தமிழில் இளநிலை.

குறிப்பு

இடைநிலையில் தேர்ச்சி, முதுநிலையில் தேர்ச்சிக்குச் சமமானதாகக் கருதப்படாததால் இடைநிலையில் தேர்ச்சி பெற்றவர்கள் இளநிலையில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான புலத்தை தேர்வு செய்ய வேண்டும்.

தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர், நிலை – III பதவிகளுக்கான விண்ணப்பதாரர்கள் கீழக்காணும் வரிசைமுறையின்படிதெரிவு செய்யப்படுவர்

(அ) மேலே இனம் (i) ல் குறிப்பிட்டுள்ள தொழில் நுட்பக் கல்வித் தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் முதலில் தெரிவு செய்யப்படுவர்.

(ஆ) மேலே இனம் (i) ல் குறிப்பிட்டுள்ள தொழில் நுட்பக் கல்வித் தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடில் இனம் (ii) ல் உள்ள தொழில் நுட்பக் கல்வித் தகுதியுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர்

(இ) மேலே இனம் (i) மற்றும் (ii) ல் குறிப்பிட்டுள்ள தொழில் நுட்பக் கல்வித் தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடில் இனம் (iii) ல் உள்ள தொழில் நுட்பக் கல்வித் தகுதியுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

3. (இ) கணிப்பொறி தகுதி (தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர், நிலை – III பதவிகளுக்கு)

விண்ணப்பதாரர்கள் அரசு தொழில்நுட்பக் கல்வித்துறையால் வழங்கப்படும் “Certificate course in Computer on Office Automation“ ல் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு :

மேற்குறிப்பிட்டுள்ள கணிப்பொறி தகுதியை பெற்றிராத விண்ணப்பதாரர்களும் இத்தேர்விற்கு விண்ணப்பிக்கலாம். அவ்வாறு கணிப்பொறி தகுதியற்றோர் தெரிவு செய்யப்பட்டால்

அவர்களின் தகுதிகாண் பருவத்திற்குள் மேற்குறிப்பிட்ட கணிப்பொறி தகுதியினை பெறவேண்டும்.

(ஈ) <u>தெரிவில் முன்னுரிமை</u>

நில அளவர் பதவியை பொறுத்த அளவில் அனைத்துத் தகுதிகளும் சமமாக இருக்கும்பட்சத்தில் தொழிற்பயிற்சி நிலையத்தில் நில அளவர் பயிற்சிப் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

<u>4. பொது விவரங்கள்</u>

அ. ஒவ்வொரு பதவிக்கும் மற்றும் அலகிற்கும் நியமன ஒதுக்கீட்டு விதி தனித்தனியே பின்பற்றப்படும். காலிப்பணியிட பகிர்வு, நடைமுறையில் உள்ள விதிகளின்படி பின்னர் அறிவிக்கப்படும்,

ஆ. அரசு ஆணை (நிலை) எண்.145, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 30.09.2010 ல் நேரடி நியமனத்தில் அனைத்து காலிப் பணியிடங்களில் 20% (சதவீதத்தை) நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியினை தமிழ்வழியில் படித்தவர்களைக் கொண்டு முன்னுரிமை வரிசையில் நிரப்ப அரசு ஆணையிட்டுள்ளது. தமிழ் வழியில் படித்தவர்களுக்கான முன்னுரிமை அடிப்படையிலான 20% இடஒதுக்கீடு விதி இத்தெரிவிற்கு பொருந்தும்.

இ. அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை தோராயமானதாகும். தெரிவு செய்வதற்கு முன்பு உள்ள காலியிடங்களின் நிலைமைக்கேற்ப எந்நேரத்திலும் காலியிட மதிப்பீட்டில் மாறுதல் செய்யப்படலாம்.

ஈ. தெரிவு செய்யப்பட தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த பெண் விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட காலியிடங்கள் அதே பிரிவைச் சார்ந்த ஆண் விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

உ. இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ்வரும் காலிப் பணியிடங்களுக்கு இந்து சமயத்தைச் சார்ந்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே தகுதியுடையவர் ஆவர்.

**ஊ. <u>உடற்தகுதிச் சான்றிதழ்</u>**

பணி நியமனத்திற்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உடற்தகுதிச் சான்றிதழை சமர்பிக்க கேட்டுக்கொள்ளப்படுவர்:-

| பதவியின் பெயர் | நிர்ணயிக்கப்பட்டுள்ள பார்வையின் தரம் | உடற்தகுதிச் சான்றிதழ் படிவம் |
|---|---|---|
| இவ்வறிவிக்கை பத்தி 1ல் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகள் | பார்வை தரம்-III அல்லது அதற்கு மேம்பட்டது | தமிழ்நாடு அமைச்சுப் பணி / தமிழ்நாடு நீதி அமைச்சுப் பணி/ தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள படிவம். |

தெரிவிற்கு வரும் கண்பார்வை குறைபாடுடைய விண்ணப்பதாரர்கள் தகுதி வாய்ந்த கண் மருத்துவ நிபுணரிடம் (Specialist) கண்பார்வை தகுதிச் சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

எ. மாற்றுத்திறனாளிகளுக்கான 3% இட ஒதுக்கீட்டு விதி இத்தெரிவிற்கு பொருந்தும். தெரிவு செய்யப்பட தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த மாற்றுத்திறனாளிகள் கிடைக்கப்பெறாவிடில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்கள் நடைமுறையில் உள்ள விதிகளின்படி நிரப்பப்படும்.

ஏ. தெரிவிற்கு வரும் மாற்றுத்திறனாளிகள், தங்கள் ஊனம், தாங்கள் தெரிவு செய்யப்படும் பதவிகளுக்குரிய பொறுப்புகளை முழு திறனுடன் நிறைவேற்றுவதற்குத் தடையாக இராது என்பதற்கான சான்றிதழை மருத்துவ அதிகாரியிடம் (Medical Officer) பெற்று நியமனம் செய்யப்படுவதற்கு முன் அளித்திட கேட்டுகொள்ளப்படுவர்.

ஐ. “ஆதரவற்ற விதவைகள் ” மற்றும் “முன்னாள் இராணுவத்தினர்களுக்கான” நியமன இட ஒதுக்கீடு விதி இத்தெரிவிற்கு பொருந்தும்.

ஒ. ஆதிதிராவிட வகுப்பினர் (அருந்ததியர்கள்) முன்னுரிமை வரிசை அடிப்படையில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் நிரப்பப்பட்ட பிறகும், (அவ்வகுப்பினர்களில்) தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் இருப்பின் அவ்விண்ணப்பதாரர்கள், ஆதிதிராவிட வகுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்ட இட ஒதுக்கீட்டிலும் தகுதியின் அடிப்படையில் நிரப்பப்படுவர். ஆதிதிராவிட

வகுப்பினர் அருந்ததியர்களுக்கென ஒதுக்கப்பட்ட காலிப்பணியிடங்களுக்கு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடில் அப்பணியிடங்கள் ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த (அதாவது ஆதிதிராவிடர் வகுப்பினர் (அருந்ததியர்கள்) தவிர) தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

ஓ. தெரிவுக் குறித்து எழுப்பப்படும் எந்த ஒரு கோரிக்கையும் தெரிவு முடிவுகள் வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் பெறப்பட வேண்டும். 90 நாட்களுக்கு பின்பு பெறப்படும் தெரிவுக் குறித்த எந்தவொரு கோரிக்கையும் பரிசீலிக்கப்படமாட்டாது.

5. <u>எழுத்துத் தேர்விற்கான பாடத்திட்டம் (கொள்குறி வகை)</u>

| பாடம் | கால அளவு | அதிகபட்ச மதிப்பெண்கள் | தெரிவிற்குத் தகுதி பெற குறைந்தபட்ச மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| **<u>ஒற்றைத் தேர்வுத்தாள்</u>**<br><u>பொது அறிவு</u><br>(பத்தாம் வகுப்பு (SSLC ) தரம்)<br>(100 வினாக்கள்) + <u>பொதுத்தமிழ்</u> / <u>பொது ஆங்கிலம்</u><br>(பத்தாம் வகுப்பு (SSLC) தரம்)<br>(100 வினாக்கள்) | 3 மணி நேரம் | (150 + 150) = 300 | 90 |

<u>குறிப்பு</u>

(i) வினாத்தாள் இரண்டு வகைகளைக் கொண்டது அதாவது

1) பொது அறிவு வினாக்கள் (100 வகைகள்) மற்றும் பொதுத்தமிழ் வினாக்கள் (100 வகைகள்)

2) பொது அறிவு வினாக்கள் (100 வகைகள்) மற்றும் பொது ஆங்கிலம் வினாக்கள் (100 வகைகள்).

விண்ணப்பதாரர்கள் முதல் 100 வினாக்களுக்கு பொது அறிவுத் தேர்வில் பதிலளிக்க வேண்டும். அடுத்த 100 வினாக்களுக்கு அவர்கள் பொதுத்தமிழிலோ அல்லது பொது ஆங்கிலத்திலோ பதிலளிக்க வேண்டும்.

(ii) பொது அறிவு வினாத்தாள் தமிழ் மற்றும் ஆங்கிலத்திலும் பொதுத்தமிழ் வினாத்தாள் தமிழிலும் பொது ஆங்கில வினாத்தாள் ஆங்கிலத்திலும் இருக்கும்.

(iii) மேற்குறிப்பிட்ட பாடங்களுக்கான பாடத்திட்டம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செய்தி அறிவிப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பாடத்திட்டம் | பக்கம் | தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செய்தி அறிவிப்பு வெளியீட்டு எண் மற்றும் நகல் |
|---|---|---|---|
| 1. | பொது அறிவு | 490 | 16, நாள் 01.08.2004 |
| 2. | பொதுத் தமிழ் | 721 | 11, நாள் 16.05.2001 |
| 3. | பொது ஆங்கிலம் | 722 | 11, நாள் 16.05.2001 |

மேற்குறிப்பிட்ட பாடங்களுக்கான பாடத்திட்டம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய இணையதளமான www.tnpsc.gov.in -லும் உள்ளது.

**6. <u>தேர்வு மையங்கள்</u>**

இவ்வறிவிக்கையின் பிற்சேர்க்கை-II-ல் குறிப்பிடப்பட்டுள்ள தேர்வு மையங்களில் எழுத்துத்தேர்வு நடைபெறும்.

<u>குறிப்பு</u>

தேர்வு மையங்களின் எண்ணிக்கையைக் கூட்டவோ, குறைக்கவோ அல்லது விண்ணப்பதாரர்களை வேறுமையங்களுக்கு ஒதுக்கீடு செய்யவோ தேர்வாணையத்திற்கு உரிமையுண்டு.

**7. <u>தெரிவு செய்யும் முறை</u>**

விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் பெறும் மதிப்பெண்கள் விண்ணப்பதாரர்கள் தாங்கள் எந்த பதவிக்கு / அலகிற்கு தெரிந்தெடுக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கும் விருப்பம் மற்றும் நியமனங்களுக்கான இட ஒதுக்கீட்டு விதி ஆகியவற்றின் அடிப்படையில் இறுதித் தெரிவு மேற்கொள்ளப்படும்.

8. <u>விருப்ப முன்னுரிமை</u>

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களின் பட்டியல் வெளியிட்ட பின்பு விண்ணப்பதாரர்களின் சான்றிதழ்களை சரிபார்க்கும் போது விண்ணப்பதாரர்கள் தாங்கள் எந்த அலகிற்கு ஒதுக்கப்பட வேண்டும் என்ற தங்கள் விருப்பத்தினை தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்படுவர். இருப்பினும், விண்ணப்பதாரர்கள் எந்த அலகிற்கு / பணிக்கு விண்ணப்பித்தாலும் விண்ணப்பத்தில் தங்களின் தகுதியின் அடிப்படையில் எந்த பதவிக்கு தாங்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற தங்கள் விருப்பத்தினை தெரிவிக்க வேண்டும்.

9. <u>கட்டணம்</u>

| | | |
|---|---|---|
| அனைத்து பதவிகளுக்கும் | தேர்வுக் கட்டணம்<br>விண்ணப்பக் கட்டணம் | - ரூ.75/-<br>- ரூ.50/- |
| | மொத்தம் | - ரூ.125/- |

- தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு கோரும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப்படிவக் கட்டணமாக ரூ.50/-ஐ மட்டும் செலுத்த வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் வங்கி அல்லது அஞ்சல் அலுவலகம் அல்லது கட்டணம் செலுத்தும் முகமை ஆகியவைகளுக்கான சேவைக் கட்டணத்தையும் செலுத்த வேண்டும்.
- நிரந்தரப் பதிவு முறை (One-Time Registration) யில் ஏற்கெனவே பதிவு செய்து ரூ. 50/-ஐ பதிவு கட்டணமாக செலுத்தி பதிவெண் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் அவ்வசதியினை பெற்ற நாளிலிருந்து 5 வருட காலங்களில் தேர்வாணையம் அறிவிக்கும் எந்த பதவிக்குமான அறிவிக்கைக்கு விண்ணப்பிக்கும் பொழுதும் விண்ணப்பக் கட்டணத்தை செலுத்தத் தேவையில்லை. ஆனால் தேர்வுக் கட்டணத்தை செலுத்த வேண்டிய விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்ட 5 வருட காலங்களுக்கு தேர்வாணையத்தின் எந்த பதவிக்குமான அறிவிக்கைக்கு விண்ணப்பிக்கும் போதும் தேர்வுக் கட்டணத்தை செலுத்த வேண்டும்.

( மேலும் விவரங்களுக்கு தேர்வாணையத்தின் விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி 12 ஐ காண்க)

10. **<u>தடையின்மைச் சான்றிதழ்</u>**

தேர்வாணையத்தின் “விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் “ பத்தி 15 (எ)ல் உள்ள விதிமுறைகளைக் காண்க.

11. **<u>சலுகைகள்</u>**

ஆதிதிராவிடர், ஆதிதிராவிட(*அருந்ததியர்கள்*), பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் *(முஸ்லீம்)* , ஆதரவற்ற விதவை, முன்னாள் இராணுவத்தினர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் மற்ற வகையினைச் சார்ந்தவர்களுக்கான வயது மற்றும் / அல்லது கட்டணச் சலுகைகள் குறித்த விவரங்கள் தேர்வாணையத்தின் விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி 12 மற்றும் 14ல் அறிவிக்கப்பட்டுள்ளன.

12. **<u>பிணையம்</u>**

இளநிலை உதவியாளர் (பிணையம்) மற்றும் வரித் தண்டலர்களாக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நியமனத்தின் போது நியமன அதிகாரி குறிப்பிடும் பிணையத் தொகையினை செலுத்த வேண்டும்.

**<u>13. இணைய வழியில் விண்ணப்பிக்கும் முறை</u>**

- விண்ணப்பதாரர்கள் இணையவழி மூலமாக மட்டுமே தேர்வாணையத்தின் இணையதளம் முகவரியான (www.tnpsc.gov.in) அல்லது www.tnpscexams.net ல் விண்ணப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பிக்கும் முன், அண்மையில் எடுக்கப்பட்ட தங்களது புகைப்படம் மற்றும் கையொப்பங்களின் படிம நகல்களை (Scanned images) குறுந்தகடு / இலக்கமுறை குறுந்தகடு / பேனா இயக்கி (CD/DVD/Pen Drive) போன்ற தகவல் சேமிப்பு சாதனங்களில் விண்ணப்பதாரர்கள் சேமித்து வைத்திருக்கவேண்டும்.
- இணைய வழி விண்ணப்பத்தினை பதிவு செய்ய சரியான மின் அஞ்சல் முகவரியோ அல்லது கைப்பேசி எண்ணோ அவசியமானதாகும். தெரிவு முடிவுகள் வெளியிடப்படும்வரை விண்ணப்பதாரர்கள் தங்களது மின்அஞ்சல் முகவரியை பயன்பாட்டு நிலையில் வைத்திருக்க வேண்டும். தேர்வாணையம், விண்ணப்பதாரர்களுக்கு எழுத்துத்தேர்வில் கலந்து கொள்வதற்கான தேர்வுக் கூட

நுழைவுச்சீட்டு (அனுமதி குறிப்பாணை), நேர்காணல் தேர்வில் கலந்து கொள்வதற்கான அழைப்பாணை மற்றும் பிற குறிப்பாணைகள் போன்றவற்றை விண்ணப்பதாரர்களால் பதிவு செய்யப்பட்ட மின்அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் அவற்றை தேர்வாணைய இணைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

- இணையவழி விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் விண்ணப்பதாரரின் பெயர், விண்ணப்பிக்கும் பதவி, இனம், பிறந்த நாள், முகவரி, மின்அஞ்சல் முகவரி, தேர்வு மையம் உள்ளிட்ட விவரங்கள் அனைத்தும் இறுதியானதாகக் கருதப்படும். இணையவழி விண்ணப்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கடைசி நாளுக்கு பின்னர் எவ்வித மாறுதலும் செய்ய அனுமதி கிடையாது. மேலும், சில முக்கிய விவரங்கள அடங்கிய புலங்களை (Fields) பின்னர் மாற்ற முடியாது என்பதால் விண்ணப்பத்தினை நிரப்பும்போது, தேர்வர்கள் மிகுந்த கவனத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இது தொடர்பாக விண்ணப்பதாரர்களால் மேற்கொள்ளப்படும் எந்த வித கடிதத் தொடர்பும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.
- குறுஞ்செய்திகளைப் பெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் தங்களது கைப்பேசி எண்ணை விண்ணப்பத்தில் தெரிவிக்க வேண்டும்.

## 13. (அ) இணைய வழி விண்ணப்பித்தல்

1) விண்ணப்பதாரர்கள் முதலில் தேர்வாணையத்தின் இணையதள முகவரியான www.tnpsc.gov.in அல்லது www.tnpscexamns.net எனும் முகவரியை அணுகவும்.
2) இணையவழி விண்ணப்பத்தினைக் கண்ணுற "இணையவழி மூலம் விண்ணப்பம்" எனும் புலத்தை சொடுக்கவும்.
3) நீங்கள் விண்ணப்பிக்க விரும்பும் பதவி அல்லது பணித் தொகுதியை தெரிவு செய்யவும் நீங்கள் ஏற்கெனவே நிரந்தரப் பதிவு முறையின் (One-Time Registration) மூலம் தனித்துவ / பிரத்யேக எண் பெற்றிருப்பின், அந்த எண்ணையும், கடவுச் சொல்லையும் (Pass Word) பதிவு செய்து, ஏற்கெனவே

உள்ள விவரங்களைக் காணவும், தேவையெனில் தகுந்த மாறுதல் (Update) செய்யலாம்.

4) நீங்கள் தகுந்த தனித்துவ / பிரத்யேக எண்ணை பற்றிருக்கவில்லையெனில், எந்த புலத்தையும் விடுபடாமல் அனைத்து தேவையான விபரங்களையும் பதிவு (Enter) செய்யவும்.

5) "புகைப்படம் மற்றும் கையொப்பம் ஆகியவற்றை படிம நகல் எடுப்பதற்கான வழிகாட்டல்கள்" என்ற இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தங்களது புகைப்படம் மற்றும் கையொப்பத்தை பதிவேற்றம் செய்யவும். புகைப்படம் மற்றும் கையொப்பம் இணைக்கப்படாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

<u>13(ஆ) கட்டணம் செலுத்தும் முறை</u>

விண்ணப்பக் கட்டணத்தை செலுத்தும் முறையை தெரிவு செய்யவும் (**நேரடி அல்லது இணையவழி**)

<u>(ஆ) (i)இணைய வழியில் செலுத்தும் முறை (இணைய வழி வங்கிச் சேவை / கடன் அட்டை / பற்று அட்டை)</u>

1) இணைய வழி வங்கிச் சேவை (Net Banking), கடன் அட்டை (Credit Card), பற்று அட்டை (Debit Card) ஆகியவற்றின் வாயிலாக தேர்வுக் கட்டணம் செலுத்துபவரின் கவனத்திற்காக வழங்கப்பட்டுள்ள விதிமுறைகளை பின்பற்றி தேர்வுக் கட்டணத்தை செலுத்தவும்.

2) கட்டணம் தொடர்பான விபரங்களை இணைய வழி விண்ணப்பத்தில் நிரப்பியவுடன் சேவையகத்திடமிருந்து (Server) தகவல் வரும் வரை காத்திருக்கவும். இரட்டிப்பு செலுத்துகையை தவிர்க்கும் பொருட்டு ‘முந்தைய’ (Back) அல்லது புதுப்பி (Refresh) பொத்தானை அழுத்தாதீர்.

3) இணைய வழி தொடர்பான நடவடிக்கைகள் வெற்றிகரமாக முடிவுற்றவுடன் ஒரு பதிவு எண்ணும், கடவுச்சொல்லும் (Password) காணக்கிடைக்கும். விண்ணப்பதாரர்கள் எதிர்கால தொடர் பயன்பாட்டிற்காக பதிவு எண்ணையும்,

கடவுச்சொல்லையும் குறித்து வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**<u>(ஆ) (ii) நேரடிக் கட்டணம் செலுத்தும் முறை (அஞ்சல் அலுவலகம் அல்லது இந்தியன் வங்கி மூலம்)</u>**

1) நேரடிக் கட்டணம் செலுத்தும் முறையைத் தேர்ந்தெடுக்கும் விண்ணப்பதாரர்கள் கட்டணத்தைச் செலுத்த குறிப்பிடப்பட்ட அஞ்சலகம் அல்லது இந்தியன் வங்கியைத் தேர்ந்தெடுக்கலாம்
2) விண்ணப்பத்தை சமர்ப்பிக்க **<u>‘சமர்ப்பி’</u>** (SUBMIT) எனும் புலத்தினைச் சொடுக்கவும்.
3) விண்ணப்பதாரர்களுக்கு ஒரு பதிவு எண்ணும், ஒரு கடவுச் சொல்லும் வழங்கப்படும். இவற்றை குறித்து வைத்துக் கொள்ளுமாறு விண்ணப்பதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
4) விண்ணப்பத்தை சமர்ப்பித்தவுடன் தோன்றும் செலுத்துச் சீட்டை அச்சுப்படி (Print Out) எடுத்து அருகாமையிலுள்ள இந்தியன் வங்கி கிளைக்கோ அல்லது குறிப்பிடப்பட்டுள்ள அஞ்சலகத்திற்கோ சென்று கட்டணத்தை செலுத்தவும்.
5) பின்னர், விண்ணப்பதாரர்களுக்குரிய செலுத்துச் சீட்டினை வங்கி அல்லது அஞ்சலகக் கிளையிலிருந்து பெற்று, அதில் செலுத்துச் சீட்டு முறையாக ஒப்பமிடப்பட்டுள்ளதா எனவும், நடவடிக்கை எண், கிளையின் பெயர், டி.பி. (DP)குறியீட்டு எண், பணம் செலுத்திய நாள் ஆகியவை சரியாக குறிப்பிடப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்யவும்.
6) பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டு வேலை நாட்களுக்குள் அஞ்சலகத்திலோ, இந்தியன் வங்கியிலோ கட்டணம் செலுத்தபட்டால் மட்டுமே விண்ணப்பதாரர்களின் விண்ணப்பம் வெற்றிகரமாக பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படும்.

**13. (இ) அச்சுப்படி எடுத்தல்**

1) தேவைப்படின், தங்களது பதிவு எண், கடவுச்சொல் ஆகியவற்றைக் கொண்டு விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்யவோ, அச்சுப்படி எடுக்கவோ இயலும்.
2) விண்ணப்பதாரர்கள் தங்களது இணையவழி அச்சுப்படியினையோ, பிற தொடர்புடைய ஆவணங்களையோ தேர்வாணையத்திற்கு அனுப்பத் தேவையில்லை. விண்ணப்பதாரர்கள் அடுத்தக்கட்ட தெரிவிற்கு தகுதிபெறும் நிலையில் மட்டுமே அவர்களுடைய சான்றிதழ்கள் சரிபார்க்கப்படும்.

குறிப்பு

I. தேர்விற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் கடைசி நாள் வரை காத்திருக்காமல் முன் கூட்டியே விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். விண்ணப்பதாரர்கள், இணைய வழி விண்ணப்பிக்கும்போது தேர்வு கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் செலுத்தும்போதும் இணைய /வலைதள நெரிசலினால் தேர்வாணையத்தின் வலைதளத்தை தொடர்பு கொள்ள இயலாமை/ தொடர்பு துண்டிக்கப்படுதல் ஆகியவற்றை தவிர்க்க இறுதி நாள் வரை காத்திராமல் முன்கூட்டியே விண்ணப்பிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

II. மேலே குறிப்பிட்ட காரணங்களினால் விண்ணப்பதாரர்கள் தங்களின் விண்ணப்பங்களை உரிய கால கட்டத்திற்குள் (அ) கடைசி நாளைக்கு முன்பாக சமர்ப்பிக்க இயலாத சூழல் ஏற்படின் அத்தகைய காரணங்களுக்கு தேர்வாணையம் எவ்விதத்திலும் பொறுப்பாகாது. இதைத்தவிர வேறு ஏதேனும் காரணங்களினால் ஏற்படும் கால தாமதத்திற்கும் தேர்வாணையம் எவ்விதத்திலும் பொறுப்பாகாது.

III. விண்ணப்பதாரர்களுக்கென தனியாக ஒரு மின்னஞ்சல் முகவரி வைத்திருக்க வேண்டும். அத்தகைய மின்னஞ்சல் முகவரி இல்லாத விண்ணப்பதாரர்கள் தங்களுக்கென தனியாக ஒரு மின்னஞ்சல் முகவரியை விண்ணப்பிப்பதற்கு முன் உருவாக்கி வைத்துக்கொள்ள வேண்டும். எத்தகைய சூழ்நிலையிலும் தங்களது மின்னஞ்சல் முகவரி/அலைபேசி எண்.ஐ மூன்றாம் நபரோடு பகிர்ந்துகொள்ளவோ/தெரிவிக்கவோ வேண்டாம் என விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

IV. இணைய வழி விண்ணப்பத்தில் ஏதேனும் மாறுதல்கள் இருப்பின் அவற்றை திருத்திக்கொள்ளும் வகையில் இணைய வழி விண்ணப்பம் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே விண்ணப்பதாரர்கள் தங்கள் குறித்த விவரங்கள் ஏதேனும் மாறுதல் செய்யப்பட வேண்டி இருப்பின் மேற்கூறிய வசதியினை பயன்படுத்தி விண்ணப்பம் பூர்த்தி செய்வதற்கான கடைசி நாள் வரை மாறுதல் செய்து கொள்ளலாம். இறுதி நாளைக்கு பிறகு எத்தகைய மாறுதல்களும் செய்ய இயலாது என்பதால் அறிவிக்கையில் அறிவிக்கப்பட்ட பதவிக்கு விண்ணப்பதாரர்கள் மிகுந்த கவனத்துடன் இணைய வழி விண்ணப்பத்தினை பூர்த்தி செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும் தேர்வுக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் குறித்த விவரங்களை அதற்குரிய கலத்தில் மிகுந்த கவனத்துடன் பூர்த்தி செய்ய வேண்டும். அத்தகைய கலத்தில் எத்தகைய மாறுதல் செய்யவோ, திருத்தவோ இயலாத வகையில் உருவாக்கப்பட்டிருப்பதனால் மிகுந்த கவனத்துடன் பூர்த்தி செய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள். தேர்வுக் கட்டணம் செலுத்தப்பட்ட விவரங்கள் அல்லது அதில் ஏற்படும் தவறுகளுக்கு தேர்வாணையம் பொறுப்பாகாது (அ) அது குறித்து எழுப்பப்படும் எந்த ஒரு கோரிக்கையும் பரிசீலிக்கப்பட மாட்டாது.

V. விண்ணப்பதாரர்கள் இணைய வழி விண்ணப்பத்தில் உள்ள அனைத்து கலங்களிலும் தங்கள் குறித்த விவரங்களை மிகுந்த கவனத்துடன் தவறாமல் பூர்த்தி செய்ய வேண்டும். குறிப்பாக தங்களுடைய பெயர் ஆண் / பெண், தந்தையின் பெயர் / கணவர் பெயர் மற்றும் ஏனைய விவரங்களில் தவறு ஏற்படா வண்ணம் சான்றிதழ்களில் உள்ளவாறு பதிவு செய்யப்பட வேண்டும். அனைத்து விவரங்களையும் பூர்த்தி செய்யப்பட்ட பின் இறுதியில் சமர்ப்பிக்கவும் (submit) என்ற பொத்தானை அழுத்துவதற்கு முன் மீண்டும் ஒரு முறை அனைத்து கலங்களும் நிரப்பப்பட்டிருக்கிறதா என்று சரிபார்த்த பின்னரே சமர்ப்பிக்கவும் (submit) என்ற பொத்தானை இறுதியாக அழுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

VI. பூர்த்தி செய்யப்பட்ட இணையவழி விண்ணப்பபடிவத்தில் திருத்தம்/மாறுதல் செய்வதற்கான கூறப்பட்ட இறுதி நாளுக்குப் பிறகு திருத்தம்/மாறுதல் கோரும் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. தவறான/முழுமையற்ற விவரங்களை பூர்த்தி செய்யப்பட்டிருப்பது அல்லது தேவைப்படும் விவரங்களை விண்ணப்பப்படிவத்தில் பூர்த்தி செய்யப்படாமல் உள்ள

விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் குறித்து எழுப்பப்படும் எந்த ஒரு கோரிக்கைக்கும் தேர்வாணையம் பொறுப்பாகாது.

VII. இணைய வழியில் தேர்வுக் கட்டணம் செலுத்துவதில் ஏற்படும் தவறுகளுக்கு தேர்வாணையம் பொறுப்பாகாது.

VIII. சந்தேகங்கள் குறித்த விவரங்களுக்கு தேர்வாணையத்தின் உதவி மைய எண் 1860 345 0112-ஐ தொடர்பு கொள்ளவும்.

**14. ஏனைய முக்கிய அறிவுரைகள்**

**I.** **விண்ணப்பதாரர்கள் தேர்விற்கான தங்களுடைய தகுதிகளை உறுதிசெய்தல்:-** விண்ணப்பங்களில் கொடுக்கப்படும் தகவல்களின் அடிப்படையில் மட்டும் விண்ணப்பதாரர்கள் சாதியின் பெயர், கோரும் வயது, பொதுக்கல்வி, கல்வித்தகுதி மற்றும் தொழில் நுட்பக்கல்வித் தகுதிகள் ஆகியவை ஏற்கப்படுகின்றன. **மேற்சொன்ன தகவல்களைத் தேர்வாணையம் ஐயமறத் தெளிந்து கொள்ளும் வரை அவர்களின் விண்ணப்பங்கள் எல்லா நிலைகளிலும் தற்காலிகமாக (Provisional) ஏற்கப்பட்டுள்ளதாகவே கருதப்படும்.**

**II.** **விண்ணப்பிக்கும் முறை:-** விண்ணப்பதாரர்கள் தேர்வாணையத்தின் இணையதள முகவரியான www.tnpsc.gov.in பயன்படுத்தி இணையவழி விண்ணப்பிக்கலாம். இணையவழி விண்ணப்பத்தினை பூர்த்தி செய்வதற்கான விரிவான அறிவுரைகள் யாவும் இவ்வறிவிக்கையின் பத்தி 13 ல் குறிப்பிடப்பட்டுள்ளன.

**III.** தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கான தேர்வுக் கூட அனுமதிச்சீட்டினை தேர்வாணையத்தின் இணையதள முகவரியான www.tnpsc.gov.in ல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். **தபால் மூலம் தேர்வுக் கூட அனுமதிச்சீட்டு அனுப்பிவைக்கப்படமாட்டாது.**

**IV.** விண்ணப்பதாரர்களுக்கான குறை தீர்ப்பு மையத்தின் மூலம் விண்ணப்பதாரர்கள் தேர்வாணையத்தினை, நேரடியாகவோ அல்லது தொலைபேசி எண். 044-28297591-92, 044-28297584-86 அல்லது தேர்வாணையத்தின் கட்டணமில்லா சேவை எண். 1800 425 1002 மூலமாகவோ, தங்களுடைய விண்ணப்பங்கள் தொடர்பான / வழிகாட்டல் / தகவல் / கருத்து ஆகியனவற்றை குறித்தும் எல்லா வேலை நாள்களிலும் 10.00 மு.ப முதல் 5.45 பி.ப வரை தொடர்பு கொண்டு உரிய தகவலை பெற்றுக்கொள்ளலாம்.

**V. <u>அலைபேசி மற்றும் ஏனைய பொருள்களுக்கும் தடை</u>**

(i) விண்ணப்பதாரர்கள் அச்சிடப்பட்ட புத்தகங்கள், குறிப்புகள், தனித்தாள்கள் மின்னணு அல்லது வேறு வகையான கணிப்பான்கள், கணிதம் மற்றும் வரைபடகருவிகள், வாய்ப்பாடு, படியெடுக்கப்பட்ட வரைபடம், காட்சி வில்லைகள், பாடப்புத்தகங்கள், மற்றும் வரைபடம் ஆகியவற்றை தேர்வுக்கூடத்திற்கு எடுத்துவர அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்டுள்ள எழுது பொருட்கள், அதாவது பேனா அல்லது பென்சில் மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும். வண்ண வரைகோல்/பென்சில் (Sketch pen) ஆகியவைகளை பயன்படுத்தக் கூடாது.

(ii) அலைபேசிகள்/அகவி (Cell phones / pager) அல்லது வேறு வகையில் தொடர்பு கொள்ளும் கருவிகள் ஆகியனவற்றை தேர்வு நடைபெறவிருக்கும் மையங்களுக்கு எடுத்துவர அனுமதிஇல்லை. மேற்கண்ட அறிவுரைகளை மீறும் விண்ணப்பதாரர்களின் செயல் கடுந்தவறாக கருதப்பட்டு ஒழுங்கு நடவடிக்கையும், தேர்வாணையம் நடத்தும் தேர்வுகள் மற்றும் தெரிவுகளில் அவர்களின் உரிமையை தேர்வாணையம் முடிவு செய்யும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இழக்க நேரிடும்.

(iii) தடைசெய்யப்பட்ட பொருட்களை (அலைபேசி/அகவி) தேர்வு நடைபெறும் மையங்களுக்கு எடுத்துவர வேண்டாம் என விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். மேற்கூறிய தடை செய்யப்பட்ட பொருள்களை எடுத்துவரும் பட்சத்தில் அப்பொருள்களை பாதுகாப்பதற்கான எவ்வித சிறப்பு ஏற்பாடுகள் செய்து தர உத்தரவாதம் அளிக்க இயலாது. மேலும் அவ்வாறு தடை செய்யப்பட்ட பொருட்களை வைத்திருப்பவர்கள், தேவைப்படின் அவ்விடத்திலேயே சோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

(iv) விண்ணப்பதாரர்கள், இணையவழியில் விண்ணப்பத்திணை பூர்த்தி செய்ய இருப்பதால், வயது, கல்வித்தகுதி, சாதிசான்றிதழ் மற்றும் உடற்தகுதித் தொடர்பான சான்றிதழ்கள் மற்றும் ஏணைய சான்றிதழ்களை சான்றாக விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பத் தேவையில்லை. எனினும் விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ள விவரங்களுக்குச் சான்றாக இருக்கும் மூலச்

சான்றிதழ்களை நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளும் பொழுதோ அல்லது தேர்வாணையம் கேட்கும் தருணத்திலோ தாக்கல் செய்தல் வேண்டும். தேர்வு எழுதத் தகுதியுடைவர் எனக் கருதும் விண்ணப்பதாரர்கள் தேர்வு எழுதுவதற்கு முன்னால் அப்பதவிக்குரிய அறிவிக்கை நாளன்று விதிகளில் உள்ளபடி அனைத்து நிபந்தனைகளையும் தாம் நிறைவேற்றுவதை விண்ணப்பதாரர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும். விண்ணப்பதாரர்களால் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்களைத் தேர்வாணையம் ஐயமறத் தெளிந்து கொள்ளும்வரை அவர்களின் விண்ணப்பங்கள் முதன்மைத் தேர்விற்கும் மற்றும் நேர்முகத் தேர்விற்கும் (அதாவது எல்லா நிலைகளிலும்) தற்காலிகமாக ஏற்கப்பட்டுள்ளதாகவே கருதப்படும். விண்ணப்பதாரர்களால் தெரிவிக்கப்படும் தகவல்கள் போதுமான மற்றும் ஏற்கத்தகுந்த காரணங்கள் இல்லையென்றும், நியமனத்திற்கு போட்டியிடத் தகுதியற்றவர் எனத் தேர்வாணையத்தால் கண்டறியப்பட்டால் எந்நிலையிலும், அதாவது தெரிவிற்கு தெரிந்தெடுக்கப்பட்ட பின்னர் கூட விண்ணப்பத்தை நிராகரிக்கும் உரிமை உண்டு.

(v) விண்ணப்பதாரர்களால் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்கள் தவறு / மோசடி எனக் கண்டறியப்பட்டால் அவ்விண்ணப்பதாரர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள தேர்வாணையத்திற்கு உரிமை உண்டு.

(vi) **<u>ஒழுங்கீனச் செயல்களுக்குத் தடை:-</u>** தேர்வு எழுதும் அறையில் மற்ற விண்ணப்பதாரர்களுடைய விடைத்தாள்களிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது மற்ற விண்ணப்பதாரர்கள் தன்னுடைய விடைத்தாளிலிருந்து பார்த்து எழுத அனுமதித்தல் அல்லது வேறு ஏதேனும் முறையற்ற உதவிகளைப் பெறவோ அல்லது பெற முயற்சிக்கவோ அல்லது அத்தகைய முறையற்ற உதவிகளைத் தரவோ அல்லது தர முயற்சிக்கவோ கூடாது. அத்தகைய விண்ணப்பதாரர்கள் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகள் மற்றும் தெரிவுகளில் அவர்களின் உரிமையை தேர்வாணையம் முடிவு செய்யும் ஒரு குறிப்பட்ட காலத்திற்கு இழக்க நேரிடும்.

(vii) **<u>தேர்வு கூடத்தில் நடந்து கொள்ளும் முறை:-</u>** தேர்வு எழுதும் எந்த ஒரு விண்ணப்பதாரரும் தேர்வுக கூடத்தில் தவறான நடவடிக்கையிலோ அல்லது தேர்வினை சீர்குலைக்கும் நோக்கத்திலோ அல்லது தேர்வாணையத்தால் தேர்வினை நடத்த பணியில்

அமர்த்தப்பட்டுள்ள பணியாளர்களை தாக்கும் முயற்சியில் ஈடுபடும் விண்ணப்பதாரர்களின் செயல்கள் கடுந்தவறாக கருதப்பட்டு அவ்விண்ணப்பதாரர்களை தண்டனைக்கு உட்படுத்த தேர்வாணையத்திற்கு உரிமை உண்டு.

(viii) மேலும் அனைத்து விவரங்களுக்கும் தேர்வாணையத்தின் விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளைக் காண்க.

**இணைய வழி மூலம் விண்ணப்பிக்கும் வசதி 28.05.2012 அன்று இரவு 11.59 மணிக்கு அதற்கான சேவை நிறுத்தப்படும்.**

(மேலும் கூடுதல் தகவல்களுக்கு தேர்வாணையத்தின் விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளை தேர்வாணையத்தின் இணையதள முகவரியான www.tnpsc.gov.in -ல் காணலாம்)

*செயலாளர்*

## பிற்சேர்க்கை - I

## *பின்னடைவு காலிப் பணியிடங்களின் விவரங்கள்

| வ. எண் | பதவியின் பெயர் | மொத்த பின்னடைவு காலிப் பணியிடங்கள் | ஏனையோர் | | பி,வ | பி.வ (மு) | மி .பி. வ / சீ ம | மி .பி. வ / சீ ம கை கால் ஊனமுற்றோர் | ஆ.தி. | ஆதீ (அ) | ப. வ, |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கண் பார்வையற்றோர் | காது கேளாதோர் | | | | | | | |
| 1. | இளநிலை உதவியாளர் | 463 | | | | 200 | 156 | | - | - | 28 |
| 2. | தட்டச்சர் | 353 | 1 | 1 | 13 | 70 | 172 | 3 | 29 | 54 | 10 |
| 3. | சுருக்கெழுத்துத் தட்டச்சர், நிலை-III | 240 | | | 46 | 13 | 81 | | 57 | 41 | 2 |

## தொகுதி - VIII தேர்வு

**முக்கியத் தகவல்கள்,**

வயதுத்தகுதி, கல்வித்தகுதி, பொதுவான தகவல்கள், தகுதி நிபந்தனைகள் பாடத்திட்டம், எழுத்துத்தேர்விற்கான திட்டம், தேர்வு மையங்கள், வழிகாட்டிகள், பிணையம், தடையின்மைச் சான்றிதழ், சலுகைகள் மற்றும் பிற முக்கிய அறிவுரைகள் ஆகியவற்றின் விவரங்களை விண்ணப்பதாரர்கள் தேர்வாணையத்தின் வலைதள முகவரியான www.tnpsc.gov.in மற்றும் www.tnpscexams.net ல் வெளியிடப்பட்டுள்ள தேர்விற்கான விரிவான அறிவிக்கையில் காணலாம். ***விண்ணப்பதாரர்கள் இணையவழி மூலம் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். பிற வகையான விண்ணப்பப்படிவங்கள் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.***

தொகுதி - IV மற்றும் தொகுதி - VIII ஆகிய இரு தொகுதிகளிலும் அடங்கிய பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், இணையவழியில் ஒரே விண்ணப்பத்தில் விண்ணப்பிக்க வேண்டும். அவ்விண்ணப்பதாரர்கள் 07-07-2012 முற்பகலில் நடைபெறும் பொது அறிவு மற்றும் பொதுத் தமிழ் / பொது ஆங்கிலத்தாள் தேர்வை எழுதுவதோடு அன்று பிற்பகலில் நடைபெறும் இந்து மதத்தாள் தேர்வையும் எழுத வேண்டும். இரு தாள் தேர்வுகளை எழுதியவர்கள் மட்டுமே தொகுதி - IV மற்றும் தொகுதி - VIII ஆகிய இரு தொகுதிகளிலும் அடங்கிய பதவிகளுக்கான தெரிவிற்கு பரிசீலிக்கப்படுவர்.

| கட்டணம் | தொகுதி IV தேர்விற்கு மட்டும் விண்ணப்பிப்பவர்கள் | தொகுதி VIII தேர்விற்கு மட்டும் விண்ணப்பிப்பவர்கள் | தொகுதி IV மற்றும் தொகுதி VIII ஆகிய இரு தேர்வுகளுக்கும் விண்ணப்பிப்பவர்கள் |
|---|---|---|---|
| விண்ணப்பக் கட்டணம் | ரூ 50/- | ரூ 50/- | ரூ 50/- |
| தேர்வுக் கட்டணம் | ரூ.75/- | ரூ.100/- | ரூ.100/- |
| | முற்பகலில் நடைபெறும் தேர்வினை மட்டும் எழுத வேண்டும். | முற்பகல் மற்றும் பிற்பகலில் நடைபெறும் இரு தேர்வுகளையும் எழுத வேண்டும். | முற்பகல் மற்றும் பிற்பகலில் நடைபெறும் இரு தேர்வுகளையும் எழுத வேண்டும். |

***செயலாளர்***